# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம், தேனி மாவட்டம்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.ப.வேல்முருகன், பி.இ.,

ந.க.எண். 925/2020/தே.மா.2 நாள் 09.12.2020

பொருள் : கட்டிடம் - தேனி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் - தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், க.புதுப்பட்டி பேரூராட்சி, உத்தமபுரம் கிராமம், சர்வே எண்கள். 1619/2A, 1620/1, 1622/3A, 1622/3B, 1622/4A, 1622/4B மற்றும் 1622/4C-ல் உள்ள 19550 சமீ பரப்பளவுள்ள மனையிடத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் தரைத் தளம் + இரண்டு தளங்களுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்ட தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1) நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், திருநெல்வேலி கோட்டம் அவர்களின் கடிதம், நக.எண். 3203/உ.பொ(தி),2018 நாள். 17.11.2020
2) மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை, நக.எண். 19178/2020/ஆ3, நாள்.16.10.2020
3) அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.04.06.2004.
4) அரசாணை எண்(நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் முறை, நாள். 4.2.2019.
5) அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31.01.2020
6) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019/பிஏ2, நாள்.06.11.2019.
7) இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.30.11.2020 (நன்னிலை வரி, விளம்பரப் பலகை கட்டணம், மற்றும் கூராய்வுக் கட்டணம் செலுத்த கோரியது)
8) உதவி நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், மதுரை கோட்டம் அவர்களின் கடிதம், நாள். 05.12.2020 (நன்னிலை வரி, விளம்பரப் பலகை கட்டணம், மற்றும் கூராய்வுக் கட்டணம் செலுத்தப்பட்டது).

*****

**உத்தரவு :**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், க.புதுப்பட்டி பேரூராட்சி, உத்தமபுரம் கிராமம், சர்வே எண்கள். 1619/2A, 1620/1, 1622/3A, 1622/3B, 1622/4A, 1622/4B மற்றும் 1622/4C-ல் உள்ள 19550 சமீ பரப்பளவுள்ள மனையிடத்திற்கு "A முதல் O வரை" என எல்லையிடப்பட்டு மனை ஒப்புதலும் அம்மனையில் உத்தேசிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலம் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களில் 1 முதல் 18

EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. Madurai Division

பிளாக்குகளில் உள்ள 432 குடியிருப்பு கட்டிடங்களின் பரப்பளவு விவரம் கீழ்கண்டவாறு அமைகிறது.

**Area Details**

Area of the Site - 19550.0 ச.மீ

OSR - 1956.40 ச.மீ (10.01%)

| S.No | Block Name | Ground Floor Area (Sq.m) | First Floor Area (Sq.m) | Second Floor Area (Sq.m) | Total Area (Sq.m) | No. of Tenements |
|---|---|---|---|---|---|---|
| 1 | Block (1-18) | 299.19 x 18 = 5385.42 | 299.19 x 18 = 5385.42 | 299.19 x 18 = 5385.42 | 16156.26 | 24 x 18 = 432 Units |
| | Total FSI Area | 5385.42 | 5385.42 | 5385.42 | 16156.26 | 432 Units |

பார்வை 6-ல் கண்ட சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வின்படி வரைபடங்கள் TNCDBR - 2019-ன்படி விதிகளை நிறைவு செய்வதால் மேற்கண்டுள்ளவாறு பரப்புகளுடன் கூடிய உத்தேச குடிசைப்பகுதி மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டிட வரைபடத்திற்கு **க.வ/ந.ஊ.உ.இ.(தே.மா).எண்.06/2020** என எண்ணிடப்பட்டு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் / நிபந்தனைகளுடன் கட்டிட அனுமதி வழங்க தொழில்நுட்ப ஒப்புதல் வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

432
384
48

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1 It is the responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

2 As per G.O. (MS) No.18, MA & WS Department date:04.02.2019 "OSR portion should be earmarked and kept open to sky without any construction with the condition that the open space reservation should be utilized only as a park.

3 However the space may be maintain by the owner concerned subject to the supervision and monitoring of the concern Local body.

4 Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

5 **நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய**

R. Munniayaa

EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. Madurai Division

உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

6 மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

7 அரசாணை எண். 17 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள். 05.02.2016- ன்படி உத்தேச குடியிருப்புக் கட்டிடத்தின் Terrace தளத்தில் மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு குறையாமல் சோலார் எனர்ஜி சிஸ்டம் கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்.

8 உத்தேச குடியிருப்பு கட்டுமானத்திற்கு Sewage Treatment Plant, Tamil Nadu combined Development and Building Rules 2019- ன்படி உத்தேசிக்கப்பட வேண்டும்.

9 தரை வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1, 2, 3, 4 மற்றும் 5 என எண்ணிடப்பட்ட எல்லைக்குள் அமைந்துள்ள OSR பகுதியினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பின்னரே, உள்ளாட்சியால் பிரஸ்தாப உத்தேசத்திற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

<u>நிபந்தனைகள்</u> :

1. உத்தேச குடியிருப்பு கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. இட அமைப்பு வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள 1956.40 ச.மீ பரப்பளவு கொண்ட திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

R. Manimegalai

**EXECUTIVE ENGINEER**
**T.N.S.C.B. Madurai Division**

8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்.3.11.04-ன்படி செப்டிக் டேங்க்கில் "U Trap" அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FIY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water act)-ன்படி மேற்படி வாரிய இணக்கம் (consent) பெறப்பட வேண்டும்.
13. கட்டிடம் கட்டப்படும் பொழுது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் வயரிங் செய்யப்பட வேண்டும்.
14. "The Tamil Nadu Government in G.O.MS.No.112, Housing & Urban Development Department, dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regularisation & Development) Act - 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or Building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with Real Estate Regulartory Authority".

பார்வை (3), (4) மற்றும் (5) -ல் கண்ட அரசாணைகளின்படி பார்வை (8) ல் கண்ட கடிதம் மூலம் மனுதாரரிடமிருந்து அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி கட்டணம் விளம்பரப் பலகை கட்டணம் மற்றும் கூராய்வுக் கட்டணங்கள் ஆகியவை முழுமையாக பெறப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் முத்திரையிட்டு ஒப்புதலளிக்கப்பட்ட இரண்டு வரைபடத்தொகுப்புகள் இறுதி ஒப்புதலுக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

கட்டிட வரைபடத்திற்கு இவ்வுத்தரவில் கண்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளின்படி இறுதி ஒப்புதல் வழங்கிட செயல் அலுவலர், க.புதுப்பட்டி பேரூராட்சி அவர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கட்டிடத்திற்கு இறுதி ஒப்புதல் தொடர்பாக மனுதாரர் செயல் அலுவலர், க.புதுப்பட்டி பேரூராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
தேனி மாவட்டம்.

**இணைப்பு**
ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்கள்
இரண்டு தொகுப்பு.

EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. Madurai Division

5

21

<u>பெறுநர்</u>
செயல் அலுவலர்,
க.புதுப்பட்டி பேரூராட்சி,
தேனி மாவட்டம்.

<u>நகல்</u>

1. நிர்வாகப் பொறியாளர்,
   தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியம்,
   மதுரை கோட்டம்,
   எண்.169, கே.கே.நகர் பிரதான சாலை,
   கே.கே.நகர்,
   மதுரை - 625 020.
   } செயலாணைக் கடிதம் மட்டும்.

2. தொழில்நுட்ப வைப்பறை
   (வரைபடங்கள் மற்றும் கடித நகல்) - 1

R. Munniayaay

EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. Madurai Division

23

## க.புதுப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி நிர்வாக அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் திரு.கோ.சுப்பிரமணியன்.,

க.உ.எண். 1/2020–2021

நாள்.09.02.2021

பொருள்: கட்டிடம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் - தேனி மாவட்டம் - உத்தமபாளையம் வட்டம் – க.புதுப்பட்டி பேரூராட்சி – சர்வே எண்கள். 1619/2எ, 1620/1, 1622/3பி, 1622/4எ, 1622/4பி மற்றும் 1622/4சி இல் உள்ள 19550 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள மனையிடத்தில் தரைதளத்துடன் கூடிய இரண்டு தளங்கள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புக்கான வரைபட அனுமதிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தை பேரூராட்சி வங்கி கணக்கில் செலுத்த தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை:
1) மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலம் தேனி அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.925/2020/தே.மா2 நாள்.09.12.2020.
2) தொடர்புடைய ஆவணங்கள்.

******

**உத்தரவு:**

பார்வை 1 இல் காணும் உத்தரவின்படி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தேனி அவர்களின் கடிதத்தில் சர்வே எண்கள். 1619/2எ, 1620/1, 1622/3பி, 1622/4எ, 1622/4பி மற்றும் 1622/4சி இல் உள்ள 19550 சதுர மீட்டர் பரப்பளவு 19550 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள மனையிடத்தில் தரைதளத்துடன் கூடிய இரண்டு தளங்கள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புக்கான நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் தேனி அவர்கள் வழங்கிய தொழில்நுட்ப அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டும் மாறுதலின்றி தரைதளத்துடன் கூடிய இரண்டு தளங்கள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புக்கான கட்டிடம் கட்டிக்கொள்ள வரைபட அனுமதி அளித்து உரிமம் வழங்கப்படுகிறது. இந்த உரிமம் 09.02.2021 முதல் 08.02.2026 ஆம் தேதி வரை சட்டப்படி செல்லக்கூடியது.

### நிபந்தனைகள்

1. இந்த ஆணை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழ் (கட்டிட ஒழுங்கு முறைகள் பிறப்பிக்கப்பட்ட விதிகளுக்கும் அரசு ஆணைகளுக்கும் உட்பட்டதாகும்.
2. கட்டிடம் கட்டும்பொழுது அதிகாரம் செய்யப்பட்ட வரைபடத்தின் பிரதி ஒன்றை ஆய்வுக்கு வரும் அதிகாரிகள் பார்ப்பதற்கு வசதியாக வைத்துக் கொள்ளல் வேண்டும்.
3. குறிப்பிட்ட காலவரையறைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிட்டால் உரிமத்தைப் புதுப்பித்துக் கொள்ளல் வேண்டும்.

R. Murugaiyan

EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. Madurai Division

25

4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மாற்றங்கள் ஏதேனும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் முன் அனுமதி பெறுதல் வேண்டும்.

5. இந்த அனுமதி உத்தரவும் வரைபட அங்கீகாரமும் சட்ட சம்பந்தமான விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் மீறும் உரிமையை மனுதாருக்கு அளிக்காது.

6. புதிய கட்டிடம் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்கப்பட வேண்டும்.

7. மனுதாரர் இவ்வலுவலகச் சான்று பெறாமல் புதிய கட்டிடத்தில் பிரவேசித்தல் கூடாது.

8. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும் , அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002 ன்படி கட்டிடத்தில் நகராட்சி செயல்படுத்தப்பட வேண்டும்.

9. கட்டிடம் கட்டும் இடம் குறித்து வில்லங்கம் ஏற்பட்டால் தங்கள் சொந்தப் பொறுப்பில் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

10. கட்டப்படும் கட்டிடம் முன்பு கண்டிப்பாக மரங்கள் நடப்படவேண்டும்.

11. இந்த உரிமம் சம்பந்தமாக வியாஜியம் ஏதும் ஏற்பட்டால் நீதிமன்ற தீர்ப்பு ஊர்ஜிதமாகக் கொண்டு இந்த உத்தரவு ரத்தானதாக கருதப்படும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகல் கட்டுமானங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் விளம்பர பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

13. இந்த அனுமதி நாளிலிருந்து ஐந்தாண்டிற்குள் கட்டிடம் முடிக்கப் பெறாவிட்டால் உரிய கட்டணம் செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

14. படிக்கட்டு, சன்சேடு தனது சொந்த இடத்திலேயே கட்டிக் கொள்ள வேண்டும்.

15. கட்டிடம் கட்டுபவர்கள் பொது பாதைக்காக 2 அடி அகலம் தனது சொந்த இடத்திலிருந்து விட வேண்டும்.

16. கட்டிடம் கட்டி முடித்தவுடன் மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைத்து புகைப்படம் இரண்டு பிரதி சமர்பிக்கப்பட்டு பேரூராட்சியால் சான்று பெற்ற பின்னரே கட்டிடம் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

17. கட்டிடம் கட்டக் கூடியவர்கள் தங்களது இடத்திற்குள்ளேயே கட்டிக்கொள்ள வேண்டும். பாதையை ஆக்கிரமிப்பு செய்தால் இவ்வுத்தரவு ரத்து செய்யப்படும்.

18. வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள இடம் தங்களுக்கு சொந்தமில்லை என தெரியவந்தாலும் (அ) மாற்றார் இடத்தில் தாங்கள் கட்டிடம் கட்டியதாக தெரிய வந்தாலும் (அ) பட்டாவில் குறிப்பிட்டுள்ள இடம் தங்களுக்கு சொந்தமில்லை என குறிப்பிட்டாலோ இந்த கட்டிட அனுமதி ரத்து செய்யப்படும்.

19. நில உரிமை குறித்து பரிசீலனைக்கு தங்களால் வழங்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனையிடத்திற்கு கட்டிட அனுமதி ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனையிடத்திற்கு வழங்கப்பட்ட கட்டிட அனுமதி எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

20. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தோட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

R. [signature]

EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. Madurai Division

21. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

22. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water act) ன்படி மேற்படி வாரிய இணக்கம் (consent) பெறப்பட வேண்டும்.

23. நீதியரசர் சம்பத் குழு பரிந்துரைகளை நிறைவு செய்யும் வகையில் கட்டுமானம் கட்டப்பட வேண்டும்.

24. உத்தேச கட்டிட உபயோக கட்டுமானத்திற்கு SOLAR WATER HEATING SYSTEM அமைக்கப்பட வேண்டும்.

25. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

மற்றும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தேனி அவர்களின் கடித ந.க.எண்.925/2020 தே.மா.2 நாள்.09.12.2020. ஆம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள சிறப்பு நிபந்தனைகளின் படியும் கட்டிடம் கட்டிக் கொள்ள தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

செயல் அலுவலர்
க.புதுப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி
தேனி மாவட்டம்

இணைப்பு

வரைபடம் -1

<u>பெறுபவர்.</u>

R. Munniayan

EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. Madurai Division



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate